6. அறிக்கை அளித்தல்

பொதுக்கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல்.

திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முதலாக தமிழில் பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை- இது வரையில் ஆங்கிலத்தில் இருந்து வந்தது—இப்போது தமிழில் இந்த அறிக்கைகளை இந்த அவைக்கு அளிப்பதற்கு நான் பெருமைப் படுகிறேன். இந்த அறிக்கையில் சில திருத்தங்கள் இருந்தாலும், அந்தத் திருத்தங்களை எல்லாம் அங்கத்தினர்கள் பொருட்படுத்த மாட்டார்கள் என்று நம்பி இந்த அறிக்கைகளை அவையில் தாக்கல் செய்கிறேன்.

(1) 1972-73 ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கை துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்) குறித்து குழுவின் முதலாவது அறிக்கை.

(2) 1972-73 ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கைத்துறைத் தலைவரின் முன்னறிக்கை மீதான குழுவின் இரண்டாவது அறிக்கை.

(3) 1972-73 ஆம் ஆண்டிற்காக வாக்களிக்கப் பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும் சாட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடு களுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய குழுவின் மூன்றாவது அறிக்கை.

7. அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு, 1978-ம் ஆண்டு வேளாண்மை வருமானவரி (திருத்த) சட்ட முன் வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1978-ம் ஆண்டு, வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினை தெரிவித்துள் ளார்கள்.

8. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1978-ம் ஆண்டு வேளாண்மை வருமானவரி (திருத்த) சட்ட முன் வடிவு,

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1978-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகப் படுத்த நான் அனுமதி கோருகிறேன்.